1981 மார்ச் 23]

விருத்தாசலம்-ராஜேந்திரப்பட்டிணம் சாலை

*149 வினா.—திரு. சி. சா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விருத்தாசலம்-ராஜேந்திரப்பட்டிணம் சாலையில், வெள்ளாற்றின் குறுக்கே தற்பொழுதுள்ள பாலத்தில் மழைக்காலத்தில் வெள்ளம் வழிந்தோடி போக்குவரத்து பாதிக்கப்படுவதும், அணுகுசாலை அடித்துச் செல்லப்படுவதும் அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், இதனை நிவர்த்திக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(இ) வெள்ள நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூ. 3.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையில் இந்த மூழ்கு பாலத்தின் அணுகுசாலையும், பக்கச் சுவர்களும், கான்கிரிட் தளமும் செப்பனிடப்பட்டுள்ளன.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : விருத்தாசலம்-ராஜேந்திரப்பட்டிணச் சாலையில், வெள்ளாற்றின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள மூழ்கு பாலத்தில், ஒவ்வொரு ஆண்டும் மழைக் காலங்களில் சேதம் ஏற்படுகிறது. இதிலே மிக முக்கியமான பிரச்சினை மழைக் காலங்களிலே பாலம் மூழ்குவதால், அந்தப் பகுதி துண்டிக்கப்பட்டு, நீண்ட தூரம் சுற்றிக்கொண்டு போக வேண்டிய நிலைமை அங்குள்ள மக்களுக்கு ஏற்படுகிறது. புவனகிரி வழியாகவோ, சேத்தியாத்தோப்பு வழியாகவோ அல்லது தொழுதூர் வழியாகவோதான் அவர்கள் செல்ல வேண்டும். மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு இந்த விவரங்கள் தெரியும். எனவே இதில் நிரந்தரமான பரிகாரம் காண வேண்டுமென்றால், 'Sub-mergible Bridge' -க்குப் பதிலாக நிலையான பாலம் 'High level Bridge' அமைக்க வேண்டும். அப்படி நிலையான பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்கப்படுமென்று கூறியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொரு விவரம் இதில் தெரிவிக்க விரும்புகிறேன். ஒவ்வொரு ஆண்டும் மூழ்கு பாலம் மழைக் காலங்களில் மூழ்குவதால் அதற்கு ஏற்படும் சேதங்களைப் பழுது

பார்ப்பதற்கு இதுவரை செலவிடப்பட்ட பணத்திலேயே புதிது கட்டியிருக்கலாமென்று தெரிய வருகிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் அளித்த வாக்குறுதியின் அடிப்படையில், இது குறித்து மிக விரைவாக நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : விரைவாக நடவடிக்கை எடுக்கப் படும்.

கிராமச் சாலைகள் திட்டத்திற்கு தலைமைப் பொறியாளர்.

* 150 வினா.—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கிராமச் சாலைகள் திட்டத்திற்கு (Rural Roads Scheme) தனித் தலைமைப் பொறியாளரை நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) & (இ) கிராமச்சாலைகள் திட்டத்திற்கு (Rural Roads தனித் தலைமைப் பொறியாளரை நியமிக்கும் செயற்குறிப்பு எதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : நெடுஞ்சாலைத் துறைக் கொள்கைக் குறிப்பு விவாதமொன்றில் கிராமச் சாலைகள் தொடர்பாகக் குறிப்பிட்டு, இந்தத் திட்டத்திற்கு தனித் தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட வேண்டு மென்ற கருத்து சொல்லப்பட்டபோது, அப்போது இருந்த மாண்புமிகு அமைச்சரவர்கள், ‘இது குறித்து பரிசீலனை செய்வோம்’ என்ற உறுதி மொழியைக் கொடுத்தார்கள். 1,500-க்கு மேற்பட்ட மக்கள் தொகையுடைய சுமார் 2,800 கிராமங்களில் 4,800 கிலோ மீட்டருக்கு மேல் சாலைகள் அமைக்கப்பட இருக்கின்றன. இதற்காக 28 கோடி ரூபாய் தேவைப்படும். இப்படிப்பட்ட மிகப் பெரிய திட்டம் தமிழ் நாட்டில் செயல்படுத்தப்படும் போது, அந்தத் திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்த, செம்மையாகச் செயல்படுத்த தனி தலைமைப் பொறியாளர் இருந்தால்தான் சிறந்ததென்று நினைக்கிறேன். எனவே இது குறித்து செயற்குறிப்பு இப்போது இல்லா விட்டாலும், தலைமைப் பொறியாளரை நியமிப்பது குறித்து அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா ?